செய்தி வெளியீடு எண் : 1420 நாள் : 16.08.2022

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

------

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (16.08.2022) சென்னை, மாநில செய்தி நிலையக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தனது உரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் பல்வேறு பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலும், பல்வேறு அரசு விழாக்களில் வைக்கப்படும் கோரிக்கைகளின் அடிப்படையிலும் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2021–2022 மற்றும் 2022–2023 மானியக் கோரிக்கைகளின் அறிவிப்புகள் ஆகியவற்றில் நிலுவையில் உள்ளவற்றை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, சிலைகள் வைப்பதற்கும், அரங்கங்கள் கட்டுவதற்கும் இடங்கள் தேர்வு செய்வது தொடர்பாக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும் அறிவிப்புகள் தொடர்பாக அவ்வப்போது ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி அறிவிப்புகளின் முன்னேற்ற நிலையை அறிந்தும், நிலுவையில் உள்ளவற்றை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியும் வருகிறார்கள். ஏற்கனவே செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பாக அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை 100 சதவீதம் நிறைவேற்றினால்தான் அடுத்த மானியக் கோரிக்கையின்போது கூடுதலாக புதிய அறிவிப்புகள் வெளியிடுவதற்கு ஒப்புதல் கிடைக்கும். எனவே, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களும், மண்டல

இணை இயக்குநர்களும் முழு ஈடுபாட்டுடன் திட்டமிட்டுப் பணிகளை விரைவாக செய்து முடிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும், மாவட்டங்களில் உள்ள நினைவகங்கள், அரங்கங்கள், மணிமண்டபங்கள், சிலைகள் மற்றும் நினைவுத் தூண்கள் ஆகியவை இருக்கும் இடம் குறித்து பொதுமக்கள் அறிந்து பார்வையிடும் வகையில் வழிகாட்டிப் பலகை வைக்கப்படவேண்டியவற்றில் நிலுவையில் உள்ளவற்றை விரைந்து அமைத்திட வேண்டும்.

அனைத்து மாவட்ட ஆட்சியரகங்களிலும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள், தமிழ் அறிஞர்கள் குறித்த புகைப்படங்கள் கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுதலுக்குரியது. இச்செயல் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை செலுத்துவதாகவும், அவர்களின் வாரிசுதாரர்கள் கோரிக்கைகளை நிரைவேற்றியதாகவும் அமையும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அரசின் திட்டங்கள், சாதனைகள், அரசாணைகள் ஆகியவற்றை உள்ளடக்கி மாதந்தோறும் வெளியிடப்பட்டு வரும் தமிழரசு மாத இதழை அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும். ஒரு இலட்சம் சந்தா சேர்க்க வேண்டும் என்ற இலக்கினை அடைய மக்கள் பிரதிநிதிகள், ஒப்பந்ததாரர்கள், வர்த்தக சங்கங்கள், அரிமா, ரோட்டரி சங்கங்கள் ஆகியோர்களை அணுகி அனைவரையும் தமிழரசு இதழை வாங்குவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

திரையரங்கங்களில் அரசின், திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகள், விழப்புணர்வுகள் குறித்த வீடியோ செய்தி மலர்களை திரையிட செய்ய வேண்டும். அதனை மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் திரையரங்க ஆய்வு மேற்கொண்டு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் நவீன வசதிகள் தற்போது அதிகம் உள்ளதால் இந்த வசதிகளை பயன்படுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்திவரும் திட்டங்கள், சாதனைகள் மற்றும் செயல்பாடுகளை கடைகோடி மக்களும் அறிந்துகொண்டு பயன்பெறும் வகையில் செயலாற்றிட வேண்டும்.

விடுதலைப் பேராட்ட வீரர்கள் மற்றும் வீடுதலைப் போர் குறித்து நமது துறையின் மூலம் சென்னை கலைவாணர் அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "**விடுதலைப் போரில் வீரத் தமிழகம்**" என்ற முப்பரிமாண ஒலி–ஒளிக் காட்சி குறித்த தகவலை அனைவரிடமும் கொண்டு செல்ல வேண்டும். இளைஞர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் இதனைப் பார்க்கும்பொழுது நமது நாடு எப்படி விடுதலைப் பெற்றது. அதற்காக நமது தலைவர்கள் எவ்வாறு போராடினார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். எனவே, மாவட்ட செய்தி மக்கள்

தொடர்பு அலுவலர்கள், மண்டல இணை இயக்குநர்கள் அனைவரும் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு செல்வதில் முனைப்புடன் செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக, இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையுரையாற்றினார். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. சிவ.சு. சரவணன், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. மு.பா. அன்புச்சோழன், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர், மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in